மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அனைத்து இந்திய, முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும்கூட, ஒரு மரபு கருதி நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்களே 39 பேர் அந்தப் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள்? அவற்றை வாதிப்பதற் காகத்தான். அவர்கள் எல்லாம் அங்கே சென்றிருக்கிறார்கள். எனவே, இந்த அவையில் அதை எடுத்துக்கொள்ளத் தேவை யில்லை என்பது என்னுடைய கருத்து.

திரு பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, நான் விவாதத்திற்காக கேட்கவில்லை. எங்களு டைய கவனத்திற்குக்காகவாவது ஒரு காப்பியை இங்கே லாபியில் வைக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே வெளியிடப்பட்ட அந்தப் பிரதி நமக்குக் கிடைக்குமானால், அல்லது கிடைக்கா விட்டால் அதைப் பாராளுமன்றத்திற்கு எழுதிப் பெற்று நூல் நிலையத்திலோ அல்லது உறுப்பினர்களின் பார்வைக்கோ வைப் பதிலே எந்தவித மறுப்பும் இல்லை. இப்பொழுது இந்தத் தக்கர் கமிஷன் அறிக்கை குறித்து பல்வேறு மாநில சட்டமன்றங் களிலேயே பெரிய அமளிகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இங்கே ஏற்பட்ட அமளியே போதும், புது அமளி வேண்டாம் என்பதற்காகத்தான் தக்கர் கமிஷன் அறிக்கை பற்றி இங்கே விவாதிக்க வேண்டாம் என்ற கருத்தை நான் குறிப்பிட் டேன். (குறுக்கீடுகள்)

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்.

திரு. எஸ் திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நீங்கள் இப்படிப் புன் முறுவலோடு தொடர்வது குறித்து மகிழ்ச்சி.

(முற்பகல் 10–00)

திரு. எஸ். திருநாவுக்கரசு : புன்முறுவலோடுதான் ஆரம் பிக்கிறேன். கடைசி வரை பேசவிட்டால் நானும் மகிழ்ச்சி யடைவேன். சட்டமன்ற விதிகளின்படி, சட்டமன்றத்திலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் குறித்துகூட உரிமைப் பிரச்சினை எழுமானால், அவற்றைச் சட்டமன்றத்திலே எழுப்பலாம் என்று பேரவை விதி 221 கூறுகிறது. சட்டமன்றப் பேரவை விதி 221-ன்கீழே, பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் வரும் உரிமைப் பிரச்சினை ஒன்று, உடனடியாக மற்ற எல்லா அலுவல்களையும்விட முன்னிடம் பெறுமென்றும், பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் எழுகிற உரிமைப் பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில் பேர வைத்தலைவர் எத்தகைய முன்னறிவிப்பு எதுவும் இல்லாமலேகூட அவர் பொருத்தமெனக் கருதுவதை எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. எனவே, பேரவையிலே நடக்கிற நிகழ்ச்சிகளைப் பேரவையில் பேசக்கூடாது என்றல்ல, சட்டமன்றத்திற்கு

வெளியே நடக்கிற முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும் எழுப்பலாம், சட்டமன்றத்திற்குள்ளே நடக்கிற சம்பவங்கள் குறித்தும் உரிமைப் பிரச்சினைகள் மூலமாகக் கொண்டுவரலாம். 25 ஆம் தேதி அதற்கு வாய்ப்பு இல்லாமல் இங்கே வன்முறை மூலமாக நாங்களெல்லாம் அடித்து, துரத்தப்பட்ட காரணத்தாலே.......

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் படித்துக் காட்டிய விதியினுடைய பொருள் என்ன என்பதை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைநடந்துகொண்டிருக்கையில் எழும்புகிறஉரிமைப்பிரச்சினை நடந்துகொண்டிருக்கிறபோது எழும்புகிற உரிமைப் பிரச்சினை என்றால் எழுப்பலாம் இப்போது அவர் எழுப்ப வேண்டியது ஓர் உரிமைப் பிரச்சினையாக இருக்க வேண்டுமானால் அது இப்போது நடைபெற்றிருக்க வேண்டும். அவை நடந்துகொண்டிருக்கும்போது எழும்புகிற உரிமைப் பிரச்சினை என்ற பெயரில் எப்போதோ நடைபெற்றதான ஒன்றை, '' நடந்துகொண்டிருக்கின்ற '' என்ற சொற்றொடரைக் காட்டிப் பேசுவது என்பது அவைத் தலைவரவர்கள் அனுமதிக்கக் கூடிய ஒன்றல்ல.

திரு. கோ. வீரையன் : தலைவரவர்களே, on a point of clarification (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அடுத்த அலுவலுக்குப் போகிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானம். (குறுக்கீடு) அதாவது ஒரு தடவை வாய்ப்புக் கொடுத்தால் நீங்கள் அதற்கேற்ப பொருத்தமானதாக அவையில் விவாதித்தால் பரவாயில்லை. (குறுக்கீடுகள்) நான் எழுந்து நின்றால் நீங்கள் எல்லோரும் உட்கார வேண்டியதுதான். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள் (குறுக்கீடு) அடுத்த வாய்ப்புத் தரப்படும். நீங்கள் எல்லோரும் உட்காரலாம்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நடந்த வன்முறையால் சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சேலம் மாவட்டம், ஆத்தூரில் 24—3—1989 அன்று நடந்த வன்முறையால் சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்ட நிலைமை குறித்துப் பேரவையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிய என் அனுமதி கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஓர் அறிவிப்புக் கொடுத்துள்ளார். இதே பொருள் குறித்துக் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர், திருமதி பாப்பா உமாநாத், திரு. செ.